# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2262/50 - 2022 ජනවාරි මස 15 වැනි සෙනසුරාදා - 2022.01.15

*2262/50 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்**

*1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும், 1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும், 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும், 1995 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும், 1996 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 155 மற்றும் 156 ஆம் பிரிவுகளின் கீழ், காணி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**எஸ். எம். சந்திரசேன,**
*காணி அமைச்சர்.*

*"மிஹிகத்த மெதுர",*
*இல. 1200/ 6, காணிச் செயலகம்,*
*இரஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை.*

**ஒழுங்குவிதிகள்**

*(1) இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் காணி அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*(2) 2014, சனவரி மாதம் 03 ஆந் திகதி ஆக்கப்பட்ட 2013 ஆம் இலக்க காணி அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன.*


1A — PG 5712 - 370 (2022/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(3) 2014, சனவரி மாதம் 03 ஆந் திகதி ஆக்கப்பட்ட 2013 ஆம் இலக்க காணி அபிவிருத்தி ஒழுங்குவிதிகளின் 3 இல் "அ", "ஆ", "இ", "ஈ" மற்றும் "உ" பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளைப் பதிலீடு செய்வதன் மூலம் அவை,

(4)

(அ) "உழவர்" என்பது, காணியைத் தாமாகப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த அல்லது தமது குடும்பத்தின் எவரேனும் உறுப்பினரைக் கொண்டு பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துவிப்பதற்கு விருப்பமுள்ளவரும் இயலக்கூடியவரும் அத்துடன் அவருடையவும் அவரது குடும்பத்தினதும் நிலைபேற்றுக்குக் காணி தேவைப்படுகின்றவருமான குடும்பத்தின் வருடாந்த வருமானம் மூன்று இலட்சத்திற்கு (ரூ. 300,000.00) மேற்படாத ஓர் ஆள் என்று பொருளாகும்.

(ஆ) "படித்த இளைஞர்" என்பது, திருமணமாகாத 18 வயதுக்குக் குறையாதவரும் முப்பது வயதுக்கு மேற்படாதவரும் உழவர் ஒருவரின் அல்லது குறைந்த வருமானக் குழுவைச் சேர்ந்த ஆள் ஒருவர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் அத்தகைய வகுப்பு வரை படித்திருப்பவரும் என்று பொருளாகும்.

(இ) "குறைந்த வருமானமுள்ள ஆள்" என்பது, எந்த ஆளுடைய உடன் முற்போந்த ஆண்டிற்கான மொத்த வருமானம்-

(i) அந்த ஆள் திருமணமாகாத ஒருவராக இருப்பாராயின், மேற்குறிப்பிடப்பட்ட வருடத்திற்காக நான்கு இலட்சத்து எண்பதாயிரம் (ரூ. 480,000.00) ரூபாவை விஞ்சாதிருக்கின்றவர் ; அல்லது

(ii) அவர் திருமணமானவராயிருப்பின் மேற்குறிப்பிடப்பட்ட வருடத்திற்காக ஆறு இலட்சம் (ரூ. 600,000.00) விஞ்சாதிருக்கின்றதோ அந்த ஆள் என்று பொருளாகும்.

(ஈ) "உயர் வருமானமுள்ள ஆள்" என்பது, எந்த ஆளுடைய உடன் முற்போந்த ஆண்டிற்கான மொத்த வருமானம்-

(i) அவர் திருமணமாகாதவராயிருப்பின் மேற்குறிப்பிடப்பட்ட வருடத்திற்காக நான்கு இலட்சத்து எண்பதாயிரம் (ரூ. 480,000.00) ரூபாவை விஞ்சுகின்றதாயும் ஆனால் ஆறு இலட்சத்து அறுபதாயிரம் (ரூ. 660,000.00) ரூபாவை விஞ்சாததாயும் இருக்கின்றதோர் ஆள் ; அல்லது

(ii) அவர் திருமணமான ஒருவராயிருப்பின் மேற்குறிப்பிடப்பட்ட வருடத்திற்காக ஆறு இலட்சம் (ரூ. 600,000.00) ரூபாவை விஞ்சுவதாயும் ஆனால் ஏழு இலட்சத்து இருபதாயிரம் (ரூ. 720,000.00) ரூபாவை விஞ்சாததாய் இருக்கின்றதோ அந்த ஆள் என்று பொருளாகும்.

"இங்கு மத்திய வருமானம் பெறும் வகுப்பினர்களை குறைந்த வருமானம் பெறும் வகுப்பினர் மற்றும் உயர் வருமானம் பெறும் வகுப்பினர் ஆகியவற்றிற்கு உள்ளடக்கப்படுவர்.

EOG-01-0158

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.